**OS 81/2019 Dt. 31.10.2022. வாசா1 மீண்டும் அழைக்கப்பட்டு 1, 2 பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

கிரய ஒப்பந்தத்தில் எனக்கு எவ்வளவு பங்கு உரிமை உள்ளதோ அதே அளவு இரண்டாம் வாதிக்கும் உள்ளது என்றால் சரிதான். 2 ம் வாதியை விசாரித்தால்தான் கிரய ஒப்பந்தமாகத்தான் செய்யப்பட்டதா என்பதும் கிரய ஒப்பந்தத்தின் உண்மை குறித்தும் தெரியவரும் என்றால் சரிதான். 06.05.2018 ம் தேதியில் அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பை நான் வாங்கவில்லை. என்னிடம் காட்டப்படும் கண்ட முகவரி ஞானம் காம்ளக்ஸ் நியூ பஸ்டாண்டு தஞ்சாவூர் என்ற முகவரியில் டேவிட் என்பவர் நான் மட்டும்தான் என்றால் சரியல்ல. என்னுடைய முழுப்பெயர் ஜி. ஜார்ஜ்டேவிட் கடையில் வாடகைக்கு இருப்பவர்களில் டேவிட் என்று இருக்கலாம். அந்த முகவரியில் எப்போதும் வேலையாள்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். வேலையாட்கள் என் சார்பாக அந்த அறிவிப்பை வாங்கி இருக்கிறார்கள் என்றால் பதிவுத்தபாலை வாங்க நான் வேலையாட்களை அனுமதிக்கவில்லை. என்னை டேவிட் என்று அழைப்பதில்லை. ஜார்ஜ்டேவிட் என்றுதான் அழைப்பார்கள். 06.08.2018 ம் தேதி நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தேன். வழக்கு நிலுவையில் இருக்கும்போது நான் பிரதிவாதியின் வீட்டிற்கு சென்று வீட்டை சேதப்படுத்தி வீட்டில் உள்ள நகைகளை ஆட்களை வைத்து அபகரித்தேன் என்று என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவாகி உள்ளது என்றால் அது பொய்யான புகார் என்று சொல்லலாம். என்னால் இவ்வழக்கில் முன்விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றும் அது சட்டப்படி ஏற்கத்தக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

**3 ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-) A. மலர்விழி,

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.